[1970 ஆகஸ்ட் 29

திரு. விநயகம் உள்பட, டாக்டர் திரு. ஹ்ஹாண்டே அவர்கள் கூடத் தெளிவாகச் சொன்னார்கள். இதை மறுக்கிறோம் என்று சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நாம் இதிலே மூன்றாவது பாரா விலே அதைத்தான் சொல்லியிருக்கிறோம். அங்கு சொன்னது தவறு என்று நாம் கண்டிக்கிறோம், முடிவுகாணுங்கள் என்று கூறுகிறோம். மறுக்கிறோம் என்பதும் உறுதிப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம் என்பதும் பொருள் ஒன்றுதான். நல்லவேளையாக மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டாலும் டாக்டர் ஹாண்டே அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டதற்காக என்னுடைய மகிழ்ச்சி யைத் தெரிவித்து, கல்வியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துவைப்பததின்மூலம் இங்கே நடைபெற்ற விவாதம் மக்களின் செவிக்கு எட்டி, திராவிட நாக ரீகத்தைக் காப்பதற்காக இந்த ஆட்சி இருக்கிறது என்ற நிலையிலே, இந்த மன்றத்திலே திராவிட நாகரீகத்தைப்பற்றிப் பேச ஆள் உண்டு என்ற நம்பிக்கை மக்களுக்குக் கிடைத்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் விட்டுவிடுகிறேன்.

பேரவையின் அனுமதியுடன், திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுடைய தனித் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

7. அறிவிப்புகள்.

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 23/68)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 23/68) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) தனி உறுப்பினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் நாளில் மசோதாக்களை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து

THIRU K. VINAYAKAM : On a point of order. Sir. During Private Members' Day, it has been an established practice in this House that all the Bills given notice of by Members, should get precedence over the resolutions given by the Members. May I know why the Hon. Speaker has changed that order ? How did this resolution gain priority by ballot paper and how is it that the Bill got second priority by ballot paper ? It has been an established custom that the Bill must be taken up first and then the resolution. That has been the practice. How did it happen that you changed the procedure ?